மருந்து எடுக்க ஆரம்பித்தவுடன் எலும்பு அல்லது புற்றுநோய்க்கட்டியில் ஏற்படும் அதிக வலி, சில நாட்களுக்குப் பிறகு தானாகவே குறைந்துவிடும். எனவே, மருத்துவரிடம் தெரிவிக்காமல் மருந்து எடுப்பதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள்.

அதேபோல், முகம் சிவத்தலும் மருந்தைத் தொடர்ந்து எடுக்கும்போது குறைந்துவிடும். அப்படிக் குறையவில்லை என்றால், மருத்துவரிடம் தெரிவிக்கவும்.

## மருந்தை நான் எப்படி வைத்திருக்க வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அதன்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health
National Healthcare Group
SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# டமாக்ஸி:.பென்

# Tamoxifen

T61R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

டமாக்ஸி∴பென் (Tamoxifen) என்னும் இந்த மருந்து, பெண்களின் எஸ்ட்ரோஜென் (estrogen) ஹார்மோன் ஏற்படுத்தும் பாதிப்புகளைத் தடுக்கிறது. ஆரம்பநிலை மற்றும் முற்றிய நிலையிலுள்ள மார்பகப் புற்றுநோய்க்குச் சிகிச்சை அளிக்க இது பயன்படுத்தப்படுகிறது.

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

மருந்தை வாய்வழியாக, உணவுக்கு முந்தியோ அல்லது உணவுக்குப் பிந்தியோ எடுத்துக் கொள்ள வேண்டும்.

## மருந்து உட்கொள்ள நான் மறந்துவிட்டால் என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்க-விளைவுகள் யாவை?

- முகம் திடீரென சிவத்தல் (சிறிது நேரத்திற்கு)
- தோல் தடிப்புகள்



நோயாளி தகவல் கையேடு । டமாக்ஸி∴பென்

- மருந்து எடுக்கும் முதல் வாரத்தில், எலும்புகள் அல்லது புற்றுநோய்க்கட்டியில் தற்காலிகமாக வலி அதிகரித்தல்
- சிறிது குமட்டல் மற்றும் வாந்தி
- யோனிக்குழாய் காய்ந்துவிடுதல்
- மாதவிடாய் ஒழுங்கின்றி வருதல் அல்லது நின்றுவிடுதல்
- சூரியஒளி அதிகமாகப் பாதித்தல் - சூரியஒளி நேரடியாகத் தாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் மற்றும் சூரியஒளியிலிருந்து பாதுகாப்பளிக்கும் ஆடைகள்/ சூரியக்கதிர் தடுப்புக் களிம்பு பயன்படுத்துங்கள்.
- காலின் ஆழத்தில் இருக்கும் இரத்தக்குழாய்களில் இரத்தம் உறைந்து இரத்தக்கட்டிகள் உருவாகுதல்
- கர்ப்பப்பை புற்றுநோய் வரும் அபாயம் அதிகரித்தல்
- பார்வைக் கோளாறுகள் ஏற்படுதல்

## நான் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை?

பின்வருவன இருந்தால் உடனே உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும் :

- யோனிக்குழாயிலிருந்து வழக்கத்திற்கு மாறான இரத்தப்போக்கு அல்லது மிக அதிகமான இரத்தப்போக்கு
- இடுப்பெலும்பு வலி
- பார்வை மாற்றங்கள் எ.கா. பார்வை மங்குதல்
- கால்வலி அல்லது கால் வீங்குதல், நெஞ்சு வலி அல்லது மூச்சுத்திணறல்